முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 08.11.2025

O.S No. 266/2014

பிவா.,சா. -7. விஜயகுமார்

முதல் விசாரணை.

நான் 2022 ம் ஆண்டிலிருந்து நாகர்கோவில் மாவட்ட தீயணைப்பு அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க மாவட்ட அலுவலருக்கு அறிவிப்பு வந்தது. அவருக்கு பதிலாக இன்று நான் சாட்சியம் அளிக்க எனக்கு கொடுக்கப்பட்ட சாட்சி சான்றாவணம். 7 ஆக குறியீடு செய்கிறன் அழைப்பாணையில் கோரியிருந்த வசந்தம் திருமண மண்டபத்திற்கான தீ உரிமைக்கான விண்ணப்பப படிவம் 2014 ல் அதன் உரிமையாளர் மனு தாக்கல் செய்து 2015 ல் உரிமம் வழங்கப்பட்டது. அதில் உரிமையாளர் என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தது. தனி பெயர் எதுவும் இல்லை. பொதுவாக எங்கள் அலுவலகத்தில் வருடத்திற்கு ஒருமுறை ஆவணங்கள் அனைத்தையும் அழித்துவிடுவோம் அதனால் 2015 ல் வசந்தா திருமண மண்டபத்திற்கு கொடுக்கப்பட்ட உரிமம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் தற்போது எங்கள் கைவசம் எதுவும் இல்லை.

பொதுவாக தீ உரிமம் பெறுவதற்கு உரிமையாளரின் விண்ணப்பமும், கட்டிட அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், கட்டிட உறுதிதன்மை சான்று, வரி ரசீது, இடத்தின் உரிமை ஆவண நகல், ஆகியவற்றை சமர்பித்தல் வேண்டும். அந்த விண்ணபத்தை நாங்கள் ஆய்வாளருக்கு அனுப்பி அறிக்கை பெறுவோம். அதன் அடிப்படையில் உரிமை வழங்குவோம் அல்லது மனுவை தள்ளுபடி செய்வோம்.

2015 ம் வருடத்தை தவிர வேறு எந்த ஆண்டிற்கும் வசந்தா திருமண மண்டபத்திற்கு தீ உரிமம் பெறுவதற்கு மனு தாக்கல் செய்யவில்லை. 2015 ல் வசந்தா திருமண மண்டபம்

கொடுத்த விண்ணப்பம் அழிக்கப்பட்டதை காண்பிக்கும் அழிக்கப்பட்ட கோப்புகளின் பதிவேட்டில் உண்மை நகலை சாட்சி சான்றாவணம். 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை இல்லை.